

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

*அ.எண்.239/2015*

*தேதி: 30.9.2015*

# பெற்றோரை முதியோர் இல்லத்தில் சேர்க்காதீர்கள் சமக நிறுவனர் – தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ முதியோர் தினச்செய்தி

"வீட்டின் பெயரோ அன்னை இல்லம்... ஆனால் அந்த அன்னை இருப்பதோ முதியோர் இல்லம்" என்ற புதுக்கவிதை வரிகள் முதியோர்கள் முகங்களில் தெரியும் கவலை ரேகைகள் என்பது வேதனையான உண்மை.

பாரத நாட்டின் கலாச்சாரப் பெருமைகளில் முதலிடம் வகிப்பது கூட்டுக் குடும்ப அமைப்புதான். தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா, மகன்கள், மகள்கள், பேரப்பிள்ளைகள் என்ற குடும்ப அமைப்பு, இந்தியா முழுவதும் மொழி, மத, இன, சாதி பிரிவுகளைத் தாண்டி நிலைத்து நின்ற பெருமை கொண்டது. ஆனால், பொருளாதார மாற்றங்கள் ஏற்படுத்திய தாக்கங்கள், அரசியல், சமூக கட்டமைப்புகளின் ஆணிவேர் வரை ஊடுருவியது தவிர்க்க முடியாததாகி விட்டது. அவசரம், பரபரப்பு, தேடல்கள் என இயந்திர வாழ்க்கையில் மானுடம் தொலைந்து போனதும் காலத்தின் கட்டாயமாகிவிட்டது.

குடும்ப உறவுகளுக்கிடையே மனம் விட்டுப் பேசுதல், மகிழ்ச்சியாக நேரம் செலவிடுதல், கூடி உண்ணுதல், உறவினர்களின் வீடுகளுக்குச் செல்லுதல் என சில தலைமுறைகளுக்கு முன் வாடிக்கையாக இருந்த சம்பிரதாயங்கள் இன்றைய தலைமுறையினர் கேள்விப்பட்டது கூட இல்லை. கணவன், மனைவி இருவருமே பொருளாதார வளர்ச்சியை மட்டுமே கருத்தில்

கொண்டு ஓடிக்கொண்டே இருப்பதால் குழந்தைகளோடு செலவிடும் தரமான நேரம் (Quality Time) என்பது குறைந்து கொண்டே வருகிறது. இதன் விளைவு, உறவுகளுக்குள் அந்நியோன்யம் என்பது எட்டாத தூரமாகிவிட்டது.

இந்த ஒரு கலாச்சார மாற்றம், கூட்டுக் குடும்ப மரபுகளை குலைத்து விட்டது என்பது நிகழ்கால யதார்த்தம். ஈன்று புறந்தந்து, சான்றோனாக்கி, சமுதாயத்தில் தனி அந்தஸ்து பெற்றுத் தந்த பெற்றோர்கள் ஒரு கால கட்டத்திற்குப் பின் சுமையாகி விடுகிறார்கள் என்பது இந்த சமூகத்திற்கு இடப்பட்ட சாபம்.

தனக்கு இல்லாவிட்டாலும் தன் பிள்ளைக்கு உணவை ஊட்டி வளர்க்கும் அன்னைக்கு பிற்காலத்தில் ஆசிரமத்திலும், முதியோர் இல்லத்திலும் உணவைத் தேடவைக்கும் பிள்ளைகள் ‘பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு’ என்பதன் நிரூபணம் தானே…

இவர்களுக்கும் நாளை இதே நிலைதான் ஏற்படும் என்பதை, “அன்று அப்பாவைச் சேர்த்தேன் முதியோர் இல்லத்தில்- இன்று என்னைச் சேர்த்து விட என் மகன் கிளம்புகையில் ‘உலகம் உருண்டையப்பா?’ - என்று வினவினான் அவன் மகன்” என்ற புதுக்கவிதை வரிகள் உணர்த்துகிறதே..! இன்றைய இளைய தலைமுறையினருக்கு என் கனிவான வேண்டுகோள்.. முதுமை என்பது சுமை அல்ல… அறிவு, அனுபவம், அரவணைப்பு… உங்கள் வாழ்க்கையின் விதியை தீர்மானிக்கும் உங்கள் பெற்றோர்களின் வாழ்க்கையை வீதியிலே விடாதீர்கள்.. உங்களைப் பெற்று ஆளாக்கிவிட்டதைத் தவிர உங்கள் பெற்றோர்கள் உங்களுக்கு எந்தத் தவறும் இழைக்கவில்லையே..? முதுமைக் காலத்தில் அன்புக்கும், உறவுக்கும் ஏங்கும் வலியை உங்கள் பெற்றோருக்கு ஏற்படுத்துவதல்ல உங்கள் நன்றிக்கடன். ’கூடி வாழ்ந்தால் கோடி நன்மை’ என்ற உண்மை இதேத் தலைமுறையிலிருந்து ஏற்றம் பெறட்டும். தகவல்கள் உலகத்தில் சஞ்சரிக்கும் உங்கள் பிள்ளைகளுக்கு தங்களது தலைமுறைகள் குறித்த தகவல்கள் தெரியாமல் தள்ளிவிடாதீர்கள்…

இந்த முதியோர் தினத்தில் முதியோர் இல்லங்களுக்கு மூடுவிழா செய்யுங்கள்.. இந்த நாளில் கையறு நிலைக்குத் தள்ளப்பட்ட, முதியோர்

இல்லங்களில் முடக்கிவிடப்பட்ட உங்கள் பெற்றோரை மீண்டும் உங்களோடு சேர்த்து வாழ்வதற்கு முடிவெடுங்கள்.. உலகத்தில் எல்லாமே நீங்கள் தான் என்று வாழ்ந்தவர்களுக்கு இறுதிக் காலத்திலும் நீங்கள் தான் உலகம் என்று வாழ்வதற்கு உங்கள் பெற்றோரை உங்களோடு மீண்டும் இணைத்துக் கொள்ளுங்கள்.. ஆயாக்களிடம் குழந்தைகளை வளரச் செய்வதை விட அவர்களது தாத்தா பாட்டியிடம் குழந்தைகளை வளர விடுங்கள்.. அன்பு, பாசம், நேசம் எல்லாம் ஆயாக்களிடம் கிடைத்துவிடாது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்..

முதுமைக்காலத்தில் ஊன்றி நடப்பதற்கு முதியோர் இல்லம் என்ற கோல்களைத் தராதீர்கள்... உங்கள் இல்லத்தில் உங்களது அன்பெனும் தோள்களைத் தாருங்கள். முதுமை ஒரு வரம்... அது எல்லோருக்கும் வாய்க்காது.

உங்கள் பெற்றோர்கள் என்ற வேரிலிருந்து தோன்றிய விருட்சங்கள் நீங்கள்.. வேர்களைப் புறக்கணிக்காதீர்கள் என்னும் முதியோர் தின வேண்டுகோளை இளைய சமுதாயத்தின் முன் வைக்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்



ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்